# மகாதமனி வீக்கத்துக்கு நவீன சிகிச்சை

சென்னை, ஜன.10: மகாதமனி வீக்கப் பிரச்னையை (அயார்டிக் அன்யூரிஸம்) 'எண்டோவாஸ்குலர் ஸ்டென்டிங்' எனப்படும் நவீன சிகிச்சை முறை மூலம் சரி செய்ய முடியும் என்று மியாட் மருத்துவமனை இதய அறுவைச் சிகிச்சை நிபுணர் பாஷி கூறினார்.

சென்னை மியாட் மருத்துவமனையில் மகாதமனி (பெரிய ரத்த நாளம்) வீக்கப் பிரச்னையைச் சரி செய்வதற்கான நவீன சிகிச்சை முறைகள் குறித்து விவாதிக்க மருத்துவ நிபுணர்கள் கலந்து கொள்ளும் 5-வது சர்வதேச மருத்துவ மாநாடு வெள்ளிக்கிழமை (ஜனவரி 11) தொடங்குகிறது. இரண்டு தினங்கள் நடைபெற உள்ள இந்த மாநாடு குறித்து மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், மியாட் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ், டாக்டர் வி.வி.பாஷி ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

'மகாதமனி வீக்கப் பிரச்னைக்கு 'எண்டோவாஸ்குலர் ஸ்டென்டிங்' எனப்படும் சிகிச்சை முறையில், பாதிக்கப்பட்ட பகுதியில் மட்டும் மயக்க ஊசி மருந்து செலுத்தி, சாஷித் துவார துளை மூலம் 'கிராப்ட்' பொருத்தப்பட்டு மகாதமனி வீக்கப் பிரச்னை சரி செய்யப்படுகிறது. இதனால் நோயாளி 3 தினங்களில் வீடு திரும்ப முடியும்' என்று அவர்கள் தெரிவித்தனர்.

## இன்று சர்வதேச மாநாடு தொடக்கம்




சர்வதேச மருத்துவ மாநாடு குறித்து விளக்கும் (இடமிருந்து) டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ், டாக்டர் வி.வி.பாஷி.